Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

03.05.2020 ஞாயிற்றுக்கிழமை




கொழும்பு, மே 3
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நேற்றிரவு 11.50 மணியளவில் மேலும் 03 பேர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 702 இலிருந்து 705 ஆக 2

## தேர்தலை நடத்தவே கூட்டம்!

### பிரதமர் மஹிந்த உறுதி

கொழும்பு, மே 3
நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திட்டமிட்டபடி அலரி மாளிகையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். எனது அழைப்புக்கிணங்க இதில் பங்கேற்க விரும்புபவர்கள் சமுகமளிக்கலாம். கூட்டத்தைப் புறக்கணிக்க விரும்புபவர்கள் புறக்கணிக்கலாம். இது தொடர்பில் எனக்கு 2




## மஹிந்தவின் ஆட்டத்துக்கு எம்மால் ஆட முடியாது!

கொழும்பு, மே 3
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடன் இணைந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போடும் ஆட்டத்துக்கு எம்மால் ஆடவே முடியாது. அதுதான் அலரி மாளிகைக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் 2

# திட்டமிட்ட திகதியில் தேர்தலை நடத்துக!


### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கோத்தாபய உத்தரவு



கொழும்பு, மே 3
நாடாளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே ஆக வேண்டும். தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார். 2



## எதிர்ப்புக்குள்ளும் சடலங்கள் எரிப்பு



முல்லைத்தீவு,மே.3
இளைஞர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும், கேப்பாப்பிலவு, தனிமைப்படுத்தல் நிலையத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நீதவானின் அனுமதியுடன் களிக்காட்டில் எரியூட்டப்பட்டன. கொழும்பைச் சேர்ந்த 80 அகவையுடைய வேலு சின்னத்தம்பி, 81 அகவையுடைய பி.ஜி.மார்டீன் ஆகிய இருவருமே கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந் 2

## கடற்படை பாதிப்பு 288 ஆக அதிகரிப்பு

### 23 உறவினர்களுக்கும் தொற்று

கொழும்பு, மே 3
வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 288 படையினரும், அவர்களின் 23 உறவினர்களும் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடற்படையினரில் 220 பேர் வெலிசறை கடற்படை முகாமுக்குள் இருந்தும், 68 பேர் விடுமுறையில் வீடு சென்றிருந்த நிலையிலும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றால் பாதிப்படைந்த கடற்படையினரில் 132 பேர் வெலிசறை கடற்படை முகாமிலுள்ள வைத்தியசாலையிலும், ஏனைய 156 பேரும் வேறு வைத்தியசாலைகளிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஏ-22)



## ரணில் அணி திடீர் 'பல்டி'!

### மஹிந்தவின் கூட்டத்தை புறக்கணிக்க முடிவு

கொழும்பு, மே 3
பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் நாளை நடைபெறவுள்ள கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித் 2

## சிறையுடைப்பு பிசுபிசுப்பு கைதி ஒருவர் உயிரிழப்பு

### மஹர சிறைக்குள் சம்பவம்

கொழும்பு, மே 3
மஹர சிறைச்சாலையிலிருந்து தப்பியோட முற்பட்ட 6 கைதிகள் பிடிபட்டனர் எனவும், ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், சிறை அதிகாரிகள் இருவர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இன்று அதிகாலை 2.30 2

## 21 மாவட்டங்களில் நாளை ஊரடங்கு நீக்கம்

கொழும்பு,மே 3
யாழ்ப்பாணம் உட்பட 21 மாவட்டங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நாளை காலை 5 மணிக்கு தளர்த்தப்படவுள்ளது. எனினும், கொழும்பு, கம்பஹா, களுத்துறை,புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கு எதிர்வரும் 11 ஆம் திகதி அதிகாலை 5 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 21 மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை காலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும். அதன் பின்னர், புதன்கிழமை இரவு 8 மணி முதல் 11 ஆம் திகதி காலை 2

# திட்டமிட்ட திகதியில்....

நீதிமன்றம் தடைவிதிக்காவிடின் திட்டமிட்டவாறு ஜூன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தையடுத்து நாடாளுமன்றத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்திவைத்தது. தேர்தலை ஒத்திவைக்கும்போது ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது. எனவே, நாடாளுமன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தியே ஆகவேண்டும். அதற்குரிய சகல அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது.
கொரோனா வைரஸ் தாக்கத்தையோ அல்லது பழைய நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு கோரும் யோசனையையோ அல்லது அரசமைப்பைக் காரணம் காட்டி வர்த்தமானி அறிவித்தல் விடயத்தையோ அல்லது வேட்பு மனுத் தாக்கல் விவகாரத்தையோ காரணம் காட்டி நாடாளுமன்றத் தேர்தலைக் குழப்பியடிக்கும் வகையில் யாராவது வழக்குத் தொடுத்தால் அதற்குரிய பதிலை நீதிமன்றத்துக்கு நான் வழங்குவேன் என்றார். (ஒ,5,22)

# தேர்தலை நடத்தவே...

எந்த ஆட்சேபனையும் இல்லை. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
'கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுவது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்த மாட்டேன். நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்தே இங்கு கவனம் செலுத்தப்படும்' எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.
பிரதமர் மஹிந்தவின் விசேட கூட்டத்துக்கான அழைப்பிதழ்கள் அனைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் அலுவலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கான அழைப்புக் கடிதங்கள் தங்களுக்கு கிடைத்திருப்பதாக அனைத்துக் கட்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன. (ஒ,5,22)

# மஹிந்தவின் ஆட்டத்துக்கு...

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரதமர், அலரி மாளிகையில் விசேட கூட்டத்தைக் கூட்டி ஊடகக் கண்காட்சியை நடத்த முற்படுகின்றார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசுடன் இணைந்து பயணிக்கின்றார்கள் என்று உள்நாட்டுக்கும் வெளியுலகத்துக்கும் அவர் படம் காட்டத் திட்டமிடுகின்றார். இதுக்கெல்லாம் எம்மால் வளைந்துகொடுக்க முடியாது. எமது யோசனைகளை நிராகரித்துவிட்டு பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டவே மாட்டேன் என்று ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.
எனினும், அதை எதிர்த்து நாம் நீதிமன்றம் சென்றிடுவோம் என்ற பயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கின்றனர். இந்தநிலையில் எம்மைச் சமாளிக்கவே அலரி மாளிகைக் கூட்டத்தை முற்கூட்டியே பிரதமர் ஏற்பாடு செய்துள்ளார். எனினும், நாம் நீதிமன்றம் சென்று நீதியைப் பெறுவதில் உறுதியாக இருக்கின்றோம் - என்றார். (ஒ,5,22)

# எதிர்ப்புக்குள்ளும்

தனர். இவர்களின் மாதிரிகள் கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இருவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று மருத்து அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து குறித்த சடலங்களை மாவடிப் பிலவு இந்து மயானத்தில் தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.
முல்லைத்தீவு வைத்தியசாலை வளாகத்திலிருந்து ஒருவரது சடலம் தகனம் செய்வதற்கான வாகனத்தில் ஏற்றப்பட்ட நிலையில், வைத்தியசாலைக்கு முன்னால் ஒன்று கூடிய பிரதேச இளைஞர்கள் சடலத்தை மாவடிப் பிலவு இந்து மயானத்தில் தகனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.
நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவி வரும் சூழலில், எந்தவொரு பாதுகாப்பும் இன்றி சடலத்தைத் தகனம் செய்ய முற்பட்ட வேளையிலேயே அவர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.
அதேவேளை வவுனியாவிலுள்ள மின் தகனம் செய்யும் மயானத்தில் சடலங்களைத் தகனம் செய்யுமாறு, பிரதேச இளைஞர்களால் கோரிக்கை விடப்பட்டது.
அதனையடுத்து வவுனியாவில் சடலங்களை மின் தகனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்குள்ள மின்தகனம் செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்று வவுனியாவிலிருந்து உரியவர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. முள்ளியவளை பொலிஸார் இது தொடர்பான நிலைப்பாட்டை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதியின் கவனத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையில் முள்ளியவளைப் பகுதியில் உள்ள பொதுக்காடு ஒன்றில் சடலங்களை எரியூட்ட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. களிக்காடு என்ற காட்டுப்பகுதியில் இருவரின் உடலங்களையும் தகனம் செய்வதற்கு பதில் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதைத் தொடர்ந்து நள்ளிரவு 11.45 மணியளவில் படையினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் மாவட்ட வைத்தியசாலைப்பணிப்பாளர், சுகாதாரவைத்திய அதிகாரி, கிராமசேவையாளர், பிரதேச சபை உறுப்பினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,குமாரபுரம் இளைஞர்கள், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் இருவரின் உடலங்கள் தகனம் செய்யப்பட்டன. (க-19,246)




அதிகரித்திருந்தது. அதன்பின்னர் ஒருவர் கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார்.
நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 10 பேர் விடுமுறையில் வீடு சென்று திரும்பிய கடற்படையினர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். 3 பேர் வெலிசறை கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட கடற்படையினராவர். மற்றைய இருவரும் கடற்படையினரின் நெருங்கிய உறவினர்கள் எனவும், அவர்கள் மிஹிந்தலை மெத்சிறி செவண தனிமைப் படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.
இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 10 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய இதுவரை குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 182 ஆக உயர்ந்துள்ளது. அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 706 பேரில் தற்போது 517 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# 21 மாவட்டங்களில்...

5 மணிவரை நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(க-44)

# சிறையுடைப்பு பிசுபிசுப்பு கைதி ஒருவர்....

மணிக்கும் 3 மணிக்கும் இடையில் மஹர சிறைச்சாலை யிலிருந்து கைதிகள் 7 பேர், கயிறு மற்றும் கட்டில் விரிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி சிறைச்சாலை மதில் வழியாகத் தப்பியோட முற்பட்டுள்ளனர். கைதிகள் தப்பியோடுவதை தடுப்பதற்காக, சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகள் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.
இதனால் கைதிகள் எவராலும் தப்பியோட முடியாமல் போயுள்ளதோடு, அவர்களைக் காவலர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.
இதன்போது கைதி ஒருவர் பாய்ந்து செல்ல முற்பட்ட வேளையில் மதிலில் இருந்து தவறி வீழ்ந்த நிலையில் அவருக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது. சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ராகம மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
தப்பியோட முற்பட்ட சிறைக் கைதிகளை தடுக்க முற்பட்டபோது, சிறைக் கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்புக் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் காயமடைந்து, சிகிச்சைக்காக ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ,5,22)



# ரணில் அணி...

துள்ளது.
நெருக்கடியான சூழ்நிலையில்கூட கட்சி அரசியலை முன்னெடுப்பதற்கு ராஜபக்ச தரப்பு முயற்சிப்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என ஐ.தே.க. இன்று விடுத்துள்ள விசேட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கொவிட் 19 விவகாரமானது தேசிய பிரச்சினையாகும். இதன் காரணமாகவே கட்சி அரசியலை விடுத்து, பிரதமரின் அழைப்பை ஏற்று கூட்டத்தில் பங்கேற்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்திருந்தது.
ஆனால், இந்த கலந்துரையாடலுக்கு அனைத்து முன்னாள் எம்.பிக்களும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கலந்துரையாடல் பயனுள்ளதாக அமையாது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன், தேசியப் பிரச்சினையின்போது கட்சி அரசியலை நடத்தக் கூடாது எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
குறித்த கூட்டத்தைப் புறக்கணித்தாலும், கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி ,அரசியலமைப்பைமீறாத வகையிலேயே பணிகள் இடம்பெறுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-44)

# ஊரடங்கை மீறினர் என்று இதுவரை 44,231 பேர் கைது

## 11,460 வாகனங்கள் பறிமுதல்

கொழும்பு, மே 3

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்துக்கு மாறாகச் செயற்பட்டனர் என்று இதுவரையில் 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வைரஸ் தொற்றால் ஏற்படும் நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நாடு பூராகவும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது இடர் வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போதும் நாடு முழுவதும் ஊரடங்கு நடைமுறையில் இருப்பதுடன் , இடர் வலயங்களைத் தவிர ஏனைய பகுதிகளுக்கான ஊரடங்கு நாளை திங்கட்கிழமை தளர்த்தப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை ஆறாம் திகதி மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் ஊரடங்கு உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்று சனிக்கிழமை காலை ஆறு மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலான 6 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 78 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 44 நாள்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை 44 ஆயிரத்து 231 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 11 ஆயிரத்து 460 வாகனங்கள் பறிமுதல்செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (ப)

# பெண் உத்தியோகத்தர் கிணற்றில் வீழ்ந்து சாவு

வவுனியா, மே 3

கிணறு ஒன்றில் வீழ்ந்த நிலையில் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வவுனியா செட்டிக்குளம் துடரிக்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

செட்டிக்குளம் பிரதேச சபையில் பணியாற்றும் திருக்கேதீஸ்வரநாதன் கலைவாணி (வயது 21) என்ற பெண்ணே சாவடைந்துள்ளார்.

கிணற்றில் விழுந்ததை அவதானித்த உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப-110)

# சிப்பாய்களிடம் பி.சி.ஆர் மேற்கொள்ளத் திட்டம்!

கொழும்பு, மே 3

வெலிசறை கடற்படை முகாமில் உள்ள சிப்பாய்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு உயிரியல் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளின் இறுதிக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் நாட்டில் கொரோனா தொற்றில் இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களின் தொகை 705 ஆக அதிகரித்துள்ளது. இறுதியாக அடையாளம் காணப்பட்ட 15 பேரில் 13 பேர் கடற்படையினர் எனவும், மேலும் இரண்டு பேர் அவர்களுடன் தொடர்பினை பேணியவர்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ப)



# திருமலையில் தொற்று நீக்கல்

திருகோணமலை, மே 3

கோரோனா வைரஸ் தொற்று நீக்கும் செயற்பாடுகள் திருகோணமலை நகரப்பகுதிகளில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ,கொவிட்19 தடுப்பு முற்காப்பு நடவடிக்கையாகவே கிருமி நீக்கும் செயற்பாடுகள் திருகோணமலை நகரில் மேற்கொள்ளப்பட்டன. வித்தியாலய வீதி, சாரதா வீதி, இராஜவரோதயம் வீதி, கஸ்கிசன் வீதி, சிவன் வீதி உள்ளிட்ட வீதிகளில் இவ்வாறு தொற்று நீக்கி மருந்துகள் விசிறப்பட்டது. சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மாவட்ட சுகாதாரப் பிரிவினரால் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ப-40)

### தாயை இழந்த விரக்தியில்

# தனக்குத்தானே தீயிட்டு சிறுவன் உயிர் மாய்ப்பு!

வல்வெட்டித்துறை, மே 3

பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை பகுதியில், தாய் இறந்த துயரம் தாங்காது மகன் தனக்கு தானே தீ மூட்டி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த 14 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 3 மாதத்துக்கு முன்னர் குறித்த சிறுவனின் தாயார் உயிரிழந்துள்ளார். தாயார் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த மாணவன் மன விரக்தியில் இருந்துள்ளார். கடந்த 29 ஆம் திகதி வீட்டில் ஒருவரும் இல்லாத நிலையில் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்றுள்ளார். தீக்காயங்களுக்குள்ளான சிறுவன் உடனடியாக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அன்று மாலை யாழ் போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (ப-26)

# காணாமல்போன சிறுவன் இன்று சடலமாக மீட்பு

கிளிநொச்சி, மே 3

கிளிநொச்சி, பளையில் வீட்டில் இருந்து காணாமல்போன சிறுவன் களப்பு பகுதியிலிருந்து இன்று சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடி பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இரவீந்திரன் அனோஜ் என்ற சிறுவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்தார். அண்மையில் வெளியாகிய சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடையவில்லை என உறவினர்கள் நச்சரித்தபோது, அதனால் விரக்தி அடைந்த சிறுவன் வீட்டை விட்டு வெளியே சென்றான் என்று பொலிஸார் தெரிவித்தனர். சிறுவன் ஒரு வாரமாக தேடப்பட்டு வந்த நிலையில் இன்று களப்பு பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டான். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-6-159)

# வெசாக்கை வீட்டிலிருந்தே இம்முறை கொண்டாடுங்கள்

## பிரதமரும் அறிவிப்பு

கொழும்பு, மே 3

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சவால்களை மக்கள் கருத்தில்கொண்டு வீட்டில் இருந்து வெசாக் பண்டிகையைக் கொண்டாடி தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

வெசாக் பண்டிகை தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

மத அனுஷ்டானங்களைப் பாதுகாப்பான முறையில் பின்பற்றி வெசாக் பண்டிகையினை வீட்டில் இருந்து கொண்டாடுவது அவசியமாக்கப்பட்டுள்ளது. வெசாக் பண்டிகை தினத்தன்று வீடுகளில் விளக்கேற்றுவதற்கு தேவையான மூலப் பொருள்களை தடையின்றி விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதார, பாதுகாப்பு துறையினரது செயற்பாடுகள் அளப்பரியன.

வெசாக் தினத்தன்று சமய நிகழ்வுகளுக்கு அனைத்து இலத்திரனியல் ஊடகங்களின் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும் என்று அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். வெசாக் பண்டிகையை வீட்டிலிருந்து கொண்டாடுமாறு ஏற்கனவே சுகாதார அமைச்சு அறி வித்திருந்த நிலை யில், பிரதமரும் அந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (ப)




# இலங்கையரை மீட்க புறப்பட்ட விமானங்கள்

கொழும்பு, மே 3

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் சிக்கியுள்ள இலங்கை மாணவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காகச் சிறப்பு விமானங்களை பயன்படுத்துவதற்கு இலங்கை எயார் லைன்ஸ் நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

அதன்படி நான்கு விமானங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்த மான ஒரு விமானம் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டது. அத்தோடு நாளை திங்கட்கிழமை மற்றும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானங்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தை நோக்கிப் புறப்படவுள்ளது.

அதே நேரத்தில் அங்கிருந்து திரும்பி அனுப் பப்படும் விமானங்கள் மே 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆஸ்திரேலியாவின் மெல்போர் நோக்கிப் புறப்படும்.

அந்த நாடுகளிலுள்ள உயர் ஸ்தானிகரால யத்துடன் வெளிவிவகார அமைச்சு இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெ டுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# ஆயுர்வேத மருத்துவர்களின் சேவைகளைப் பெறத் தயார்!

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 3

தனிமைப்படுத்தல் மையங்களுக்காக ஆயுர்வேத மருத்துவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தயார் எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் மையங்களை தங்களுக்கு பொறுப்பளிக்குமாறு ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் அண்மையில் விடுத்திருந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தனிமைப்படுத்தல் பணிகளுக்கு ஆயர்வேத திணைக்களத்திற்கு அதிகாரமளித்து, ஆயர்வேத மருத்துவர்களை உடனடியாக அதில் ஈடுபடுத்த உடனடியாக சுற்றறிக்கையை வெளி யிட வேண்டும் என அந்த சங்கம் குறிப்பிட்டி ருந்தது. இந்த நிலையிலேயே தனிமைப்படுத்தல் பணிகளுக்கு ஆயர்வேதம் மூலமாக பெற்றுக் கொள்ளக்கூடியவற்றைப் பெற்றுக்கொள்ளத் தாங்கள் தயார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ப)



# முப்படைகளின் கட்டுப்பாட்டில் இதுவரை 9,660 பேர் தனிமையில்

## உளவுத் துறை, உதவிப் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, மே 3

கொவிட் 19 வைரஸ் தொற் றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இதுவரை, 9ஆயிரத்து 660 பேர் முப்ப டைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்ப டுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வும், மேலும் 88 ஆயிரத்து 273 பேர் சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளாக் கப்பட்டுள்ளதாகவும் தேசிய உளவுத் துறையின் உதவிப் பணிப்பாளர் பராக்கிரம டி சில்வா தெரிவித்தார். இலங் கையில் கொவிட் 19 தொற் றாளர் அடையாளம் காணப் பட்டது முதல் இன்று காலை வரையிலான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல், சுய தனி மைப்படுத்தல் நடவடிக்கை களுக்கு உட்படுத்தப்பட்டவர்க ளின் மொத்த எண்ணிக்கையே அவை என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் இன்று வரை அடையாளம் காணப்பட்ட 700 தொற்றா ளர்களில் ( ஜனவரி இறுதியில் அடையாளம் காணப்பட்ட சீன பெண் தொற்றாளர் கணக் கில் கொள்ளப்படவில்லை), 41 பேர் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்த நிலையில் நேரடியாக தனி மைப்படுத்தல் நிலையங்க ளுக்கு அனுப்பப்பட்டவர் கள். அத்துடன் இலங்கை யில் அடையாளம் காணப் பட்ட ஏனைய தொற்றாளர்க ளில் 367 பேர் கொரோனா தொற்று தொடர்பில் உள் நாட்டில் பல இடங்களில் இருந்தும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப் பட்டு தனிமைப்படுத்தப்பட் டிருந்தவர்கள். இந்த நிலை யில் சமூகத்தின் இடையே பொது வெளியில் அல்லது வைத்தியசாலைகளில் சிகிச்சை களுக்குச் சென்ற நிலையில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் 281 பேரா வர்.

உண்மையில், இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 4737 பேர் வெளிநா டுகளில் இருந்து வந்த நிலை யில் தனிமைப்படுத்தல் நிலை யங்களுக்கு அனுப்பப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். இறுதியாக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட இலங்கையர்கள் உட்பட தற்போது, ஆயிரத்து 161 பேர் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்த நிலையில் தனிமைப்படுத்தல் நிலையங்க ளில் தங்கவைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். அவ்வாறு வெளிநாடுகளில் இருந்து வந்த 3ஆயிரத்து 576 பேர் தனிமைப்படுத்தல் நடவ டிக்கைகளை நிறைவு செய் துள்ளனர்.

உள் நாட்டில் பல இடங்க ளில் இருந்து 4ஆயிரத்து 923 பேர் தனிமைப்படுத்தல் நிலை யங்களில் தனிமைப்படுத்தப் பட்டு கண்காணிக்கப்பட்டுள் ளனர். அவர்களில் ஆயிரத்து 237 பேர் உரிய தனிமைப்படுத் தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறியுள்ள நிலையில் மேலும் 36-86 பேர் தொடர்ந்து அந்த நிலையங்களில் கண்கா ணிக்கப்பட்டு வருகின்றனர் - என்றார். (ப)

# 216 அமைப்புக்கள் மக்களுக்கு உதவி

சாவகச்சேரி, மே 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் 216 பொது அமைப்புக்கள், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், விளை யாட்டுக்கழகங்கள், கிராம அபி விருத்திச் சங்கங்கள் போன் றவை பிரதேச செயலரின் அனு மதியுடன், மக்களுக்கு அத்தி யாவசிய உணவுப் பொருள் களை வழங்கியுள்ளன. பிரதேச செயலகம் ஊடாக வேள்ட் விஷன் லங்கா நிறுவ னத்தினர் இரு கட்டங்களாக ஆயிரத்து 300 குடும்பங்க ளுக்கும், 400 குடும்பங்க ளுக்கும், மானிப்பாய் கிறீன் மருத்துவமனையும், மானிப் பாய் சரஸ்வதி சனசமூக நிலையமும் இணைந்து 100 குடும்பங்களுக்கும், யாழ்ப்பா ணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவிகள் 150 குடும்பங்க ளுக்கும், கொடிகாமம் வர்த் தக வங்கிக் கிளையினர் 30 குடும்பங்களுக்கும், கொடிகா மம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் 100 குடும்பங்களுக்கும், வரணி ஒன்றியத்தினர் ஆயி ரத்து 48 குடும்பங்களுக்கும், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தி னர் 50 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணம் வெளிச்சம் நிறுவனத்தினர் 150 குடும்பங்க ளுக்கும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 2006 உயர்தர மாணவர்கள் 100 குடும்பங்களுக்கும், சாவ கச்சேரி தாய்நிலம் அறக்கட் டளை நிலையத்தினர் 30 குடும்பங்களுக்கும், பல்க லைக்கழக ஆசிரியர் சங்கத்தி னர் 70 குடும்பங்களுக்கும், விழுதுகள் அமைப்பினர் 25 குடும்பங்களுக்கும், தென்ம ராட்சி கலாசாரப் பேரவையி னர் 72 குடும்பங்களுக்கும், வரணி மத்திய கல்லூரி 2010 உயர்தர வகுப்பு மாணவர்கள் 31 குடும்பங்களுக்கும், தென் மராட்சி அபிவிருத்தி ஒன்றிய கனடாக் கிளையினர் 280 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருள்களை வழங் கியுள்ளனர். (க-9)

# மாணவி பாலியல் துஸ்பிரயோகம்; ஒரு பிள்ளையின் தந்தைக்கு மறியல்

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் 15 வயது மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில், 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை கைது செய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பெற்றோர் மூத்த மகளான மாணவியின் பொறுப்பில் ஏனைய இரு சகோதரிகளை யும் விட்டுவிட்டு கடந்த மார்ச் மாதம் இரத்தினபுரிக்கு சென் றுள்ளனர். இந்த நிலையில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதையடுத்து, திரும்பி தமது வீட்டிற்கு வரமுடியாத நிலை ஏற்பட் டது. மாணவி மற்றும் அவரு டைய இரு சகோதரிகள் உட்பட 3 சிறுமிகளும் தனியே வீட்டில் வாழ்ந்து வந்துள்ள னர். இந்த சிறுமிகள் தனியே இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய அதே பிரதே சத்தைச் சேர்ந்த 25 வயது டைய நபர் ஒருவர் 15 வயது மாணவியை பாலியல் துஷ்பிர யோகத்திற்கு உட்படுத்தியுள் ளார் என்று குற்றஞ்சாட்டப் படுகிறது.

சம்பவம் தொடர்பில் மட்டக்க ளப்பு வாகரையைச் சேர்ந்த 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையை பொலிஸார் கைது செய்ததுடன் குறித்த மாண வியை வைத்தியசாலையில் சேர்த்தனர். கைதுசெய்யப் பட்டவர் வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் கடந்த வியா ழக்கிழமை முற்படுத்தப்பட் டார். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதேவேளை இரத்தினபுரியில் இருந்து வரமுடியாத நிலையில் இருந்த குறித்த சிறுமியின் பெற்றோரை பொலிஸார் விசேட அனுமதி வழங்கி வீட்டுக்கு வரவழைத்தனர். (ப)

# அபிவிருத்தி அலுவலருக்கு 1000 ரூபா கிடைக்கவில்லை

*யாழ்ப்பாணம், மே 3*

பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுக்கு போக்குவரத் துப்படியாக ஆயிரம் ரூபா வழங்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும், மாவட் டச் செயலர் அறிவித்த போதும், இதுவரை அந்தக் கொடுப்பனவு கிடைக்கப்பெற வில்லை என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரிவிலும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் இடர்காலத்தில் பெரும் பணிகளை ஆற்றிவரு கின்றனர். இவ்வாறு பணி யாற்றி வருகின்ற அலுவலர்க ளுக்கு ஆயிரம் ரூபா போக்குவ ரத்துப்படி வழங்குமாறு மாவட் டச் செயலர் க.மகேசன் சகல பிரதேச செயலாளர்களையும் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கோரியிருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றுகின்ற பிரதேச செயலாளர்கள் சிலர் இன்னும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போக்குவரத்துப் படியை இதுவரை வழங்க வில்லை என்று சுட்டிக் காட் டப்பட்டுள்ளது. இந்த விடயம் மாவட்டச் செயலரின் கவனத் துக்கும் கொண்டுவரப்பட்டுள் ளது. (ப-50)

# பருப்பு, ரின் மீனுக்கான அதிக பட்ச விலை நீக்கம்




*கொழும்பு, மே 3*

மைசூர் பருப்பு மற்றும் தகரப் பேணியில் அடைக்கப்பட்ட மீன் ஆகியவற்றுக்கான அதிகபட்ச சில்லறை விலை நீக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துச் சிறப்பு வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட் டுள்ளது. பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையால் வெளியிடப் பட்டுள்ள வர்த்தமானி அறிவித்த லில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் மைசூர் பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 65 ரூபாவாகவும் 425 கிராம் எடை கொண்ட தகரப் பேணியில் அடைக்கப்பட்ட மீனின் விலை 100 ரூபாவாகவும், அதிக பட்ச சில்லறை விலையாக அறிவிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (எ)



# 2022 வரை கொரோனா நீடிக்கும்

*கொழும்பு, மே 3*

கொரோனா வைரஸ் தொற்றானது எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள பிரபல பல்கலைக்கழகத்தின் மாணவர் கள் குழாம் ஒன்று இந்த விடயத்தை தெரிவித் துள்ளது.

இந்த வைரஸானது 18 முதல் 24 மாதங்கள் வரை நீடித்திருக்கக்கூடியது என்றும் தெரிவிக் கப்பட்டது. (எ)



# 2 மாவட்டங்கள் விடுவிக்கப்பட்டன

*கொழும்பு, மே 3*

தனிமைப்படுத்தப்பட்ட கண்டி, களுத்துறை மாவட்டங் கள் மீளத் திறக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளான கண்டி மாவட்டத்தின் அக்குறணை , களுத்துறை மாவட்டத்தின் பன்னில , சீனன் கோட்டை ஆகிய பகுதிகள், மக்களின் இயல்பு வாழ்க் கைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# கொழும்பில் சிக்கிய 350 பேர் இன்று மலையகம் திரும்பினர்

*கொழும்பு, மே 3*

அமைச்சர் ஆறுமுகம் தொண்ட மானின் பணிப்புரையின் பேரில் கொழும்பில் உள்ள மலையகத் தைச் சேர்ந்த 350 பேர் முதல் கட்டமாக அவர்களது ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்துவந்த மலையகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் நெருக்கடி களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களை அவர்களது ஊர்களுக்கு அழைத்துச் செல்வதற்கான முயற்சி களை ஆரம்பம் முதலே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்புரையின் பேரில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் முன்னெடுத்து வந்தார்.

கொழும்பில் உள்ளவர்களை அவர்களது ஊர்களுக்கு அனுப்பு வது நோய்ப் பரவலை மேலும் தீவிரமாக்கும் என்று முன்னதாக சுகாதார அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். எனி னும், தற்போது சுமார் 40 நாள்க ளுக்கும் மேலாக இவர்கள் அடை பட்டு இருக்கும் நிலையில், இவர்க ளுக்கு நோய்த் தொற்று இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டு, ஊர்க ளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் சிக்கியுள்ள மலைய கத்தைச் சேர்ந்தவர்களின் பெயர் பட்டியல் ஒன்றை பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், அண்மையில் தயாரித்து கொழும்பு பிராந்தியப் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கைய ளித்திருந்தார்.

இவர்களில் முதல்கட்டமாக 16 வயதிற்குட்பட்டோரும், 60 வய துக்கு மேற்பட்டோரும், கர்ப்பி ணிப் பெண்களும், உடல் நலக்கு றைவானோரும் தெரிவுசெய்யப் பட்டு அவர்களின் ஊர்களுக்கு இன்று காலை அனுப்பிவைக்கப் பட்டனர்.

பதுளையைச் சேர்ந்த 49 பேரும், நுவரெலியாவைச் சேர்ந்த 71 பேரும், கண்டியைச் சேர்ந்த 63 பேரும், கேகாலையைச் சேர்ந்த 28 பேரும், இரத்தினபுரியைச் சேர்ந்த 46 பேரும், மொணராகலையைச் சேர்ந்த 26 பேரும் என மொத்த மாக 350 பேர் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டனர். (ப)



# பாடசாலை ஆக்கிரமிப்பு மகிந்தவுடன் பேசுவேன்

## முன்னாள் எம்.பி. சார்ள்ஸ் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், மே 3*

பிரதமர் தலைமையிலான கூட்டத் தில் கூட்டமைப்பில் யார் கலந்து கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் நிச்சய மாக கூட்டத்தில் கலந்து கொள் வேன். கலந்துகொண்டு, வடக்கில் பாடசாலைகளை இராணுவம் கையகப்படுத்தியது தொடர்பில் பேசுவேன் என வன்னி தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்ம லநாதன் தெரிவித்துள்ளார். பிரதமர் மகிந்த ராபக்சவுக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் அனைவருக்கும் இடையி லான சந்திப்பொன்று அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது. அந்தக் கூட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்த தாவது;

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் யார் கலந்து கொள்கிறார்கள்? யார் கலந்து கொள்ள மாட்டார்கள்? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான் நிச்சயமாகக் கூட்டத்தில் கலந்து கொள்வேன். தற்போது கொவிட் 19 இன் தாக்கம் அதிக ரித்துள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் கொவிட் 19 இன் தாக்கம் குறைவாக இருந்தாலும், பங்குனி மாதம் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் மூலமே தொற்று பரவியுள்ளது.

தற்போது வெளி மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட வேண்டிய வர்களை வடமாகாணத்தில் கொண்டு வந்து தனிமைப்படுத்து வது பிழையான விடயம். அதனை அந்தந்த மாகாணத்தில் செய்ய வேண்டும்.

அதை விட பாடசாலைகளை படைத் தரப்பு தனிமைப்படுத்துவ தற்கும், விடுமுறையில் சென்ற பாதுகாப்பு தரப்பினரை தனிமைப் படுத்துவதற்கும், சுகாதாரத் துறையினரின் ஆலோசனை இல்லாமல், இராணுவ முகாம்களுக்கு அருகில் இருக்கும் பாடசாலைகளை இராணுவம் பெறுவது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது சம்மந்த மாகக் கதைக்க வேண்டியுள்ளது. திங்கட்கிழமை பிரதமர் தலைமை யில் நடைபெறும் கூட்டத்தில் இதனைக் கதைக்க சந்தர்ப்பம் கிடைத்தால் கதைப்பேன். அத னைக் கதைப்பதற்காக அக் கூட் டத்தில் கலந்து கொள்வேன் - என் றார். (ப-18)

# மூன்று மாதக் கன்றுடன் மாடு வெட்டிக் கொலை

முல்லைத்தீவு, மே 3

3 மாதக் கன்றை வயிற்றில் சுமந்திருந்த பசு வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாணிக்கபுரம் பகுதியில் இன்று நடந்துள்ளது.

குடும்பஸ்தர் ஒருவர் தனது வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வரும் பசுமாட்டை மேய்ச்சலுக்காக விட்டுள்ளார். கடும் வெயிலில் பசியால் அலைந்து திரிந்த மாடு, வீடொன்றின் படலை திறந்திருந்த நிலையில், அங்கு சென்று நிலக்கடலைத் தோட்டத்தில் மேய்ந்துள்ளது.

அந்த வீட்டிருந்த நபர் வாளால் மாட்டின் நெஞ்சுப் பகுதியில் குத்தியுள்ளார் என்றும், அதில் பசு உயிரிழந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. பசு மூன்று மாதக் கன்றை வயிற்றில் சுமந்திருந்தது. மாட்டின் உரிமையாளர் சம்பவ இடத்துக்குச் சென்ற போது மாடு உயிரிழந்திருந்தது.

சம்பவம் தொடர்பில் மாட்டின் உரிமையாளர் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். அந்த நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-19)




# கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

முல்லைத்தீவு, மே.3

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் பகுதியில் இளைஞன் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் இருந்து வெளியில் சென்ற இளைஞனைக் காணவில்லை என்று அவரது உறவினர்கள் தேடி வந்தனர்.

இந்நிலையில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் கிராமத்தைச் சேர்ந்த வவுனியா ராகஸ்வரம் இசைக்குழுவின் கீபோட் வாத்தியகலைஞரான 23 வயதுடைய ரொஷான் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-19)

# கெசல்வத்தை முடக்கம்

கொழும்பு, மே 3

கம்பளை கெசல்வத்தைப் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து, அந்தக் கிராமம் முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

கம்பளை நகரில் உள்ள அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் தற்காலிகமாக மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ள நிலையில், நகருக்கு வரும் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி கம்பளை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினருடன் பொலிஸாரும் இணைந்து கம்பளை மருத்துவமனை பஸ் மற்றும் ரயில் நிலையம் உட்பட மக்கள் கூடும் பொது இடங்களைச் தொற்று நீக்கம் செய்து வருகின்றனர்.

கலகம் அடக்கப் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்கள் மூலம் கழுவி சுத்தப்படுத்தி தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (க)

# கல்விக்கான உதவி வழங்கல்



மன்னார், மே 3

கொழும்பு கண்டிலெயிற் லங்கா நிறுவனத்தால் வடக்கு கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவி வழங்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில், போர் இயற்கை அனர்த்தம் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கொழும்பு கண்டிலெயிற் லங்கா நிறுவனத்தால் கடந்த 12 வருடங்களாக இந்த உதவிகள் வழங்கப் பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கண்டிலெயிற் லங்கா இணைப்பாளர் சின்கி ளேயர் பீட்டரின் வேண்டு கோளுக்கு அமைவாக பாடசாலை செல்லும் வசதி குறைந்த 13 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரத்து, 500 ரூபா வீத மும், பல்கலைக்கழகம் செல்லும் 12 மாணவர்க ளுக்கு மாதாந் தம் தலா 3ஆயிரம் ரூபா வீத மும், காணாமல் போன மற்றும் சிறையி லுள்ள பெண்களைக் தலை மைத்து வமாக கொண்ட 10 குடும்பங்க ளுக்கு மாதாந்த தலா ரூபா 2ஆயி ரம் வீதமும் வழங் கப்பட்டு வருகிறது. (ஐ-213)

# அக்குரணையும் பேருவளையும் விடுவிப்பு

கொழும்பு,மே 3

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, முற்றாக முடக்கப்பட்ட அக்குரணை, பேருவளை ஆகிய பகுதிகள் விடுவிக்கப்பட்டன.

எனினும், நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டம், ஊரடங்குச் சட்டம் ஆகியன மேற்படி பகுதிகளிலும் தொடர்ந்து நடைமு றையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளைகளில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வெளிபகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலுள்ள அக்குரணைப் பகுதி கடந்த மார்ச் 29 ஆம் திகதியும், களுத்துறை மாவட்டத்திலுள்ள பேருவளைப் பகுதி ஏப்ரல் 14 ஆம் திகதியும் தனிமைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் மூன்றாவது நபர் உயிரிழந்ததையடுத்து, தனிமைப்படுத்தப்பட்ட மருதானை இமாமுல் அரூஸ் மாவத்தையும் விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் ஆறு கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-44)

# நாட்டுக்கு ஆசி வேண்டி அனுராதபுரத்தில் வழிபாடு

கொழும்பு, மே 3

நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசிவேண்டி வரலாற்று முக்கியத்துவமிக்க ஜயஸ்ரீ மகா போதியில் நேற்று வழி பாடுகள் இடம்பெற்றன. இந்த வழிபாட்டில் ஜனாதிபதியும் பங்கேற்றார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அநுராதபுரம் புனித பூமிக்கு வருகைதந்த ஜனாதிபதி அடமஸ்தானாதிபதி கலாநிதி சங்கைக்குரிய பல்லேகம சிறினிவாச நாயக்க தேரரை சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். ருவன்வெலி மகா சேய வளாகத்தில் இடம்பெற்ற பூஜையிலும் கலந்துகொண்ட ஜனாதிபதி சமயக் கிரியைகளில் ஈடுபட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வேண்டி பிரார்த்தித்தார். அங்கு விசேட பிரித் பாராயண நிகழ்வொன்றும் இடம்பெற்றது. ருவன்வெலி சேய விகாராதிபதி சங்கைக்குரிய பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரரை சந்தித்த ஜனாதிபதி தேரருடன் கலந்துரையாடினார் - என்றுள்ளது. (ம)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 03.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.